# யாதுமாகி...

ஆளுமையின் ஓர் அங்கம்

*முதுகலை & தமிழாய்வுத்துறையின் மாதாந்திர மின்னிதழ்*


மலர் – 01 இதழ் – 08 மார்ச் – 2024

திருவள்ளுவர் ஆண்டு
2055 (மாசி – பங்குனி)





**முதுகலைத் தமிழாய்வுத்துறை**

**ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)**

**தேசியத் தர மதிப்பீட்டு நான்காம் சுற்றில் 'A++' அங்கீகாரம் பெற்றது** (CGPA 4-க்கு 3.69)

**(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)**

**திருச்சிராப்பள்ளி – 620020**

**தமிழ்நாடு, இந்தியா**

| | | |
|---|---|---|
| இதழ் | : | **யாதுமாகி** |
| முதன்மையாசிரியர் | : | முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,<br>தேர்வு நெறியாளர்,<br>இணைப்பேராசிரியர் & தமிழாய்வுத்துறைத் தலைவர். |
| இணை ஆசிரியர் | : | முனைவர் வ.முஹம்மது யூனுஸ், இணைப்பேராசிரியர் |
| துணை ஆசிரியர் | : | திரு. க.இம்தாதுல்லாஹ், இணைப்பேராசிரியர் |
| பொறுப்பாசிரியர் | : | **திரு. வீ.விஜய்**<br>உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை. |
| பிரதி | : | மின்னிதழ் |
| வெளியீடு | : | **மார்ச் – 2024** |

---

**இதழாசிரியர் குழு**

*முனைவர் த.செல்வராசு*
*முனைவர் ஷே.நாகூர்கனி*
*திரு. கா.முகமது இஸ்மாயில்*
*முனைவர் மு.சாதிக்பாட்சா*
*முனைவர் அ.தௌஃபீக் ரமீஸ்*
*முனைவர் க.சிராஜுதீன்*
*முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு*
*முனைவர் க.இக்பால்*
*முனைவர் மு.ஹ.ஜஹானாரா*

**மாணவ ஒருங்கிணைப்பாளர்கள்**

*ப.அ.முஹம்மது ஆதில் முர்ஷித்*
*ஷா.முஹம்மது அஸ்ரின்*
*ஜோ.ஜார்ஜ் இம்மானுவேல்*
*பி.வீ.தயாநிதி*
*ஷா.முகமது அர்ஷத்*
*உ.பாபர் முகமது இஸ்மாயில் காஜா*
*ஜா. முகமது இலியாஸ்*
*சை.அப்துல் காதர்*
*மு.முகமது இமாதுதீன்*
*ரா.பிரீத்தி*
*ம.தாரணி*
*செ.ராகவி*
*சே.ஜெரினாபேகம்*

---

கற்பவர் நாள் சில
கல்விக் கரையில
முற்றுபெறா
முடிவிலியென...
கற்றுத் தெளிதலும்
தெளித்துக் கற்றதும்
கடையாந்தரம்
மட்டும்
கலையாதிருக்கும்...
கலையாக இருக்கும்...
நாட்பட நாட்பட
வியக்கவைக்கும்
வினாவெழுப்பும்
விடையுமாகும்
நாள்பட்டத்
தேறலாகும்...
தேடலைத் தேடும்
தேர்வில்
"யாதுமாகி"
நிற்கிறது தமிழ்...

– **வீ.விஜய்**
(பொறுப்பாசிரியர்)

## விளையாடும் கடல்



நுரைத்து நுரைத்துப் பொங்கும் கடலே!
என்முன் அலைபோல
திகைப்பூட்டுவது
போதுமடி!
விழிப்பார்க்க போதா விரிந்த கோல மென்னடி?
நீல உடையை உடுத்திய
விசும்பிற்கும் உனக்கும் வேறுபாடென்னடி?
சிரித்து சிரித்து என் முன்
விளையாடிய தென்னடி?
பின்பு வெள்ளமாய் வந்து என்னை
சிறையெடுத்ததேனடி???

**வி.ஹரிஷ்ராஜ்,**
**முதுகலை முதலாமாண்டு.**



## மனதைத் திருடிவிட்டால்...?



இதயத்தைத் திருடி விட்டேன் என
எனைக் கைது செய்ய
வந்தவளிடம் சொன்னேன்...
எனைத் திருடனென கைது செய்யாதே உன்
கண்ணால் கைது செய்
நான் வாழ்நாள் முழுவதும்
உன் இதயச் சிறையில்
காலம் கடக்க வருகிறேன்....

**பீ.முகமதுசில்மிகுல்தான்,**
**முதுகலை இரண்டாமாண்டு.**



## பால்யம் சொல்லும் பாடம்

மிதி வண்டி ஓட்டும் சிறுவன்
கற்றுக் கொடுக்க யாருமில்லை
தூக்கிவிடத் துணையுமில்லை
எட்டிப்பறக்கும் ஆர்வத்தாலே
சுட்டிப் பையன் சூரனாய் ஆனான்



எக்கி எக்கி
மிதித்து மிதித்து
ஏக்கம் தீர
சிரித்து சிரித்து
சுற்றித் திரியும்
தெருக்கள் முழுதும்

கீழே விழுந்த
அடையாளம்
பாதைதோறும் மேடு பள்ளம்
தாவிக் குதிக்க ஏங்கும் உள்ளம்



வாழ்க்கை கூட
அதுபோல் தானே
தாண்டித் தாண்டி
மகிழ்ந்திடுவோமே
காற்று என்னை
எதிர்க்கின்றது
வயதோ செல்ல
மறுக்கின்றது

சீட்டின் முனையோ
சிரிக்கின்றது
ஆனாலும்
இயற்கை என்னை
அழைக்கின்றது.

**ஷா.முஹம்மது அர்ஷத்,**
**முதுகலை இரண்டாமாண்டு.**



## யாரைச் சொல்ல…?
## யாரிடம் சொல்ல…?

- வெளியேற்றப்படுவதெல்லாம்
  தீட்டென்றால்,
  கோமியம்?



- மாணவர்களின்
  கையில் சாதி,
  வண்ணங்களாய்!

- பேருந்து நிலையத்தில்
  ஆணவக்கொலை,
  சாட்சிக்கு,
  சிலைகள்!




- வருட இறுதியில்
  மழை வெள்ளம்,
  முளைக்கும் பல அறவுள்ளம்!
  தன் நிலை
  கண்டு கண்ணில்
  எழுச்சிப் பொங்கும்!
  ஆயிரம் தாரேனென்று
  சொன்னால்,
  கண் பார்வையும்
  மங்கும்!
  காரணம் அவனும்
  மனிதன்!

வே.விக்னேஷ்வரன்,
முதுகலை முதலாமாண்டு.



## மனதில் காயம்…

உரிக்க உரிக்க ஒன்றுமில்லை
உள்நிறைவு வெட்டவெட்ட
வேதனைச் சொல்லி
என்னைக் கண்ணீரில் ஆழ்த்தியது,
பெயர் வெங்காயம் உள்ளத்தில் பெரும் காயம்.

மு.முகமது இமாதுதீன்,
இளங்கலை இரண்டாமாண்டு.



## பல்லாங்குழி…

பெண் குழந்தைகள்
விளையாட
அரசாங்கம் அமைத்த
பல்லாங்குழி….
தார்சாலை



## முத்தம்…

மரம் வளர்த்தால்
பல ஆயிரம் முத்தங்கள்.
மழைத் துளிகளால்…



வே.சிவா,
இளங்கலை இரண்டாமாண்டு.



**தமிழி — 2024**

*வாகை சூடும் தமிழ்*

**01 மார்ச் 2024**

*வெள்ளிக்கிழமை*

## நாட்டுப்புறக்கலைகள்



இயல்பாகத் தோன்றி இந்கையோடு இணைந்த உணர்ச்சிகளின் உறைவிடமாய் மக்களை மகிழ்ச்சிப்படுத்துபவை "நாட்டுப்புறக் கலைகள்". இவை பெரும்பாலும் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையவை ஆகும். கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் ஆடல், பாடல்கள் மூலமாகத் தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர்.

இன்றைய நவீனச் சூழலில் நாட்டுப்புறக் கலைகள் அழிந்து வருகின்றன. அந்தவகையில் சிலவற்றை மட்டமே கோவில் திருவிழாக்களில் காண இயல்கிறது.அவற்றுள் காவடியாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், மயில் ஆட்டம், சிலம்பாட்டம், புலியாட்டம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

அம்மன் கரகம், ஆட்டக் கரகம் என கரகாட்டம் இரண்டு வகைப்படும். அம்மன் கரகம் எடுப்போர் பல நாட்கள் விரதமிருந்து பக்தி நிலையுடன் இருப்பர். தெய்வத்தின் அருளாலேயே இவர்கள் கரகத்தைத் தாங்குகின்றனர் என்ற நம்பிக்கை உள்ளது.

தொழில்முறமாக எடுக்கப்படுவது ஆட்டக்கரகமாகும். தொடக்கநிலை, வேகநிலை, அதிவேக நிலை என கரகாட்டத்தில் மூன்று வகையான நிலைகள் உள்ளன.

முருகனை வழிபடும்போது காவடி ஆட்டம் நிகழ்த்தப்படும். காவடி, குறுந்தடியினால் செய்யப்பட்டு வளைந்த நிலையில் இருக்கும். காவடி தூக்குவோர் விரதமிருந்து பக்தி உணர்வோடு இசைக்கு ஏற்ப ஆடுவர். காலில் கட்டையைக் கட்டிக்கொண்டு குதிரை போன்ற அமைப்புகள் நின்று கொண்டு ஆடுவது. "பொய்க்கால் குதிரை ஆட்டம்" எனப்படும், குதிரையின் நடுவில் நின்று ஆடுவதற்கு ஏற்பத் துவாரங்கள் இருக்கும்.

குதிரையின் உருவம் மூங்கில் குச்சி மற்றும் அட்டைகளால் செய்யப்பட்டிருக்கும், மேலும் பல நிறங்களால் ஆன துணி போர்த்தப்பட்டிருக்கும். மயில் போன்று உருவம் செய்து, அதில் முருகக்கடவுள் அமர்ந்திருப்பது போல் ஆடப்படுவது மயிலாட்டமாகும். மயில்தோகை விரித்தாடுவது போன்று ஆடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். மயில் வேடம் புனைந்திருப்பவர் மயில் மருண்டு ஓடுவது போன்றும், மயங்கி மருள்வது போன்றும் ஆடி பார்வையாளர்களைப் பரவசப்படுத்துவர். கம்பை வைத்துச் சுழற்றியாடும் முறைக்குச் "சிலம்பாட்டம்" என்று பெயர்.

சில நேரங்களில் இரண்டு கைகளிலும் இரு கம்பை வைத்துக் கொண்டும் சுழன்று ஆடுவர். அப்போது எதிரிலிருப்பவர் கல்லையோ அல்லது வேறு எந்தப் பொருளையோ கொண்டு தாக்கினாலும், தன் மீது விழாதவாறு லாவகரமாகக் கம்பைச் சுழற்றுவர். இந்த ஆட்டம் பழங்காலத்தில் தமிழர்களின் போர்க் கலையாகவும் திகழ்ந்தது.

புலிபோன்று வேடமணிந்தவரும் வேட்டைக்காரர் போன்று வேடமணிந்தவரும் சேர்ந்து ஆடும் ஆட்டமே "புலி ஆட்டம்" எனப்படும். உடல் முழுவதும் மஞ்சள் மற்றும் கருப்பு வண்ணக் கோடுகளால் புலிபோன்று வேடமிட்டிருப்பர்,

வேட்டைக்காரர் புலியைச் சுடுவதற்கு குறி பார்ப்பது போன்றும், புலி பதுங்குவது போன்றும் இருவரும் ஆடுவர். நமது முன்னோர்களின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை நாட்டுப்புறக் கலைகள் மூலம் அறிய முடிகிறது.

நமது இந்தியக் கிராமங்கள் ஒவ்வொன்றும் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றினைக் கொண்டுள்ளன. அவற்றுள் இந்திய நாட்டுப்புறக் கலைகளில் தமிழக நாட்டுப்புறக் கலைகள் பல்வேறு வகைகளில் சிறப்பும் தனித்தன்மையும் கொண்டவை.

அவற்றுள் ஒயிலாட்டம், கோலாட்டம், கும்மி, வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, பாவைக்கூத்து (பொம்மலாட்டம்), கனியான் ஆட்டம், மயிலாட்டம், தப்பாட்டம், குறவன் குறத்தியாட்டம், பொம்மைக் கலைகள், மண்பாண்டக் கலை, கோலக் கலை என்று பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

நாம் ஒவ்வொருவரும் தொழிநுட்பத்திற்கு அடிமை ஆகாமல் அழிந்து வரும் நாட்டுப்புறக் கலைகளைக் காக்க முயற்சி எடுக்க வேண்டும். அப்பொழுது தான் நம் தமிழகத்தின் தனித்தன்மைகளை வெளிக்காட்ட முடியும் நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்க வேண்டியது, நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

பொ.ஸ்ரீபாரதி,
இளங்கலை இரண்டாமாண்டு.



## அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா




இப்போது சரியாக காலை 5 மணி என்பதற்கு சாட்சியாக, ''கிரிங் கிரிங்'' என அலாரம் வாயைத் திறக்கவே பல்லு குச்சியும் கையுமாக சிம்னி விளக்கைக் கையில் ஏந்திப் பிடித்தவாறு, எதுக்குத்தான் இம்புட்டு பனியோ ஆண்டவா...என மப்ளரை போர்த்திக்கொண்டு காட்டிற்குள் நடக்கத் தொடங்கினார் மூக்கையா.

மார்கழி மாச பனி தலையிலேயே எறங்குது,

சித்தர மாச வெயிலு சொல்லவே தேவை இல்ல என்ற புலம்பலுடன் ஒரு இடத்தைப் பிடித்து ஒதுங்கினார்.

கடனைக் கட்டிவிட்டு கரவமாடு கொட்டகையை நோக்கி நடந்தார்.

செண்பகம்... செண்பகம்...

வள்ளி... வள்ளி... என்று அழைத்தவாறு சென்று, அங்குள்ள சாணங்களைச் சுத்தம் செய்தார். பின்பு மடியில் எண்ணெயைத் தடவி பாலைக் கறக்க ஆரம்பித்தார். நிறைய பால் வரும் என்ற நம்பிக்கையில், வழக்கம் போல சட்டி நிறைந்தது.

ஒரு வழியாகப் பாலைக் கறந்து வண்டியில் ஏற்றினார்.

மோலபட்டிக்குச் செல்ல வேண்டும் என்ற படபடப்பு...

சரியாக ஏழு மணிக்கு,

''ம்...ம்'' என்று அணத்திக்கொண்டு மோலபட்டி தெருவிற்குள் வண்டி நுழைந்தது.

சனம் இன்னும்தான் தூங்குது, நம்ம பொழப்புதான் இப்படி என சலித்துக் கொண்டார்.

முதல் வீடு மீனா வீடு.

இந்தா மா பால்.. பால்..என மீனா வீட்டின் முன் தனது பஞ்சு மிட்டாய் ஆரனை அடித்து வெளியே கிளப்பினார்.

வெயில் வெளிவரத் தொடங்கியது வேலையும் முடியவே மணியும் ஒன்பதைத் தொட்டது.

திடீரென்று மகனைப் பள்ளியில் விட வேண்டுமே என்று நினைப்பு வந்து வண்டியை முறுக்கிப்பிடித்தார்...

வீட்டை அடைந்தவுடன் அப்பா என ஓடி வந்தான்.

ஐந்தாம் வகுப்பு என்பதால் பள்ளி பட்டாபட்டியை அணியவைத்து, பவுடரை அப்பி அனுப்பினாள் முகிலனின் அம்மா காமாட்சி.

ஏண்டி வெள்ளை அடிச்சு அனுப்புற....என் புள்ளை என்ன கருப்பவா இருக்கான்...

என் புள்ள வெள்ளக்காரன் டி! என அப்படி ஒரு பெருமை மூக்கையாவிற்கு...

இல்லன்னு யார் சொன்னா....! அதற்கேற்றாற் போல் வெள்ளை மொசையைப் போல் இருப்பான்.

துறுதுறுத்த கால்களுக்குச் சொந்தக்காரன்.

அந்தத் தெருவுக்கே செல்ல புள்ள அவன்தா!....

அறிவுக்கார பயபுள்ள என்று சிலர் பாராட்டுவர். சிலர் இவன் கேட்கும் கேள்விக்குப் பதில் தரமுடியாமல் திக்குமுக்காடி முழிப்பதும் நடக்கும்.

இதில் இவன் அப்பாவும் சிக்கும் சுவாரசியமும் அரங்கேறும். அப்பகுதியில் ஆறு மணி செய்திக்கென ஒரு ரசிகர் பட்டாளமே கூடும் டீ கடைகளில்.

அன்றைய நாளில் அந்த ஒரு மணி நேர விற்பனை தான் அமோகமாக இருக்கும்.

ஊரே செய்திக்காற்றைச் சுவாசித்து கொண்டிருக்கும். தெருவில் செல்பவர்கள் கூட செய்தி கேட்டுக்கொண்டே நடக்கலாம் அப்படி இருக்கும் அந்த ஆறு மணி.

அப்பாவும் மகனும் டிவி பார்த்து கொண்டிருக்க, ஏதோ ஓர் ஊர் கோவில் உண்டியல் திறக்கப்பட்டு எண்ணப்பட்டதாகவும் அது 5 கோடி

என்பதும் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்ததைப் பார்த்தவன். அப்பா...அப்பா... எவ்வளோ பணம் பாரேன் என்றான்.

ஆமா என்றார்.

பேச்சுவாக்கில் சாமிக்கு எந்த சோறு பா புடிக்கும்? எனக் கேட்டான்.

ஆரம்பிச்சுடாண்டா.... என மனதில் நினைத்தவாறு, எந்த ஊர்லடா சாமி சோறு தின்னுருக்கு,

அப்புறம் எதுக்கு பா இவ்ளோ பணம் என்றான் சிறுவன்.

அது அப்புடித்தான் என்றார்.....

எப்புடி? என பதிலுக்குக் கேள்வி கேட்டான் சிறுவன்.

சில நிமிடம் என்ன சொல்வது என யோசித்துவிட்டு ம்...அது வந்து கோவிலுக்கான செலவெல்லாம் பாப்பாங்க என சமாளித்தார்.

அன்றை முழுவதும் அதனையே நினைத்தவாறு வீட்டை உலாவந்தான். சோற்றைக் கூட சரிவர உண்ண மறந்தான்,

மறுநாள் வெள்ளிக்கிழமை.

இருவரும் கோவிலுக்குச் சென்றனர்.

கோவிலுக்கு வெளியில் பசிக் கொடுமையில் யாராவது இன்றைய நாள் பசியிலிருந்து தன்னை மீட்டு விடுவார்களா என்று அமர்ந்திருந்தவர்களைப் பார்த்த பிஞ்சு மனம் கலங்கியது.

உள்ளே சென்று சாமி கும்பிட்டுவிட்டு உண்டியலில் பணத்தைப் போட போன அப்பாவின் கையைப் பிடித்தான்.

சில காசுகளை அந்த ஏழைகளுக்குக் கொடுக்கச் சொன்னான். அதன்படி கொடுத்தார்.

மறுநாள் சனிக்கிழமை விடிந்தது. விடுமுறை நாளாக இருந்தது. அப்போது அவ்வூரில் தியேட்டர் திறக்க உள்ளதாக தகவல் வரவே ஊர் சனமே படையெடுத்து கொண்டிருந்தது.

டிக்கட் விலை நாற்பது ரூபாய் என ஊரைச்சுற்றி ஒரு வண்டி அலைந்து கொண்டிருந்தது.

ஊர் மக்களுக்கு அவ்வளவு ஆனந்தம். ஏனென்றால் அவ்வூரின் முதல் தியேட்டர் என்பதால்,

முகிலனுக்கும் ஆசை பெருக்கெடுத்தது. குமார் மாமாவோடு அன்றிரவு படம்.

கல்யாண வீட்டைப் போல் கும்பல்.

ஒரு வழியாகக் கூட்டதிற்கு மத்தியில் டிக்கட் கிடைத்தது.

படம் போடுவதுபோல போய் விளம்பரம் போவதும் வருவதுமாக இருந்தது.

''குடி குடியைக் கெடுக்கும்'' ''மது நாட்டிற்கும் வீட்டிற்கும் கேடு'' என்பதாக அடிக்கடி விளம்பரம் வந்தது.

இதெல்லாம் யார் மாமா விக்கிறா என்றான் முகிலன்.

எல்லா நம்மாளுக தான்....

**ஜா.முகமது இலியாஸ்,**

**முதுகலை முதலாமாண்டு.**



---

## பய)ணம்

இரயில்வே ஸ்டேஷனுக்கு நான் வந்து அரைமணி நேரம் ஆகிறது.. கூடி இருக்கும் கூட்டங்களின் எண்ணிக்கை, ஏறிக்கொண்டே போகிறதே தவிர, இறங்கிய பாடில்லை..

வரும்போதே கூட்டம் நிரம்பி வழியும் வண்டியில், கீழே கூடியிருக்கும் மொத்தக் கூட்டமும் ஏறிக்கொண்டதைப் பார்க்கும்போது, சில நேரம் ஆச்சர்யமாக இருக்கும், சில நேரம் அதிசயமாக இருக்கும். சில நேரம் பாவமாக இருக்கும், சில நேரம் கோபமாகவும் இருக்கும்...

நானும் இதே போலத்தான், கூட்டத்தின் சப்தத்தைக் கிழித்துக்கொண்டு வரும் தொடர் வண்டியில் ஏறுவதைத் தொடர் போராட்டமாக வைத்திருந்தேன்.. எனக்கு வேலை கிடைத்த பின்பு எல்லாம் மாறியது..

கடந்த பத்து ஆண்டுகளாக ஊருக்குச் செல்லும்போது முன்பதிவு செய்த பின்பே செல்கிறேன்.. இது, அதை ஒப்பிடும்போது இரண்டு மடங்கு விலை அதிகமாக இருந்தாலும், நிறைவாக இருக்கிறது...



எனக்கு வேலை கிடைத்து பேராசிரியர் ஆனதால் பணத்தைப் பற்றிய கவலை ஓரளவேனும் மாறியுள்ளது.. ஆனால், கூலி வேலை செய்து பிழைப்பை ஓட்டும் மக்களின் நிலைமை? அவர்கள் வாழ்க்கையின் ஓட்டப்படி ஓடிக்கொண்டே இருக்கும் உழைப்பின் மிச்சங்கள் அல்லவா?...

கிழிசல் விழுந்த வேஷ்டியை உள்ளே மடித்து, வறுமையை வெளியில் காட்டாமல், வாழ்க்கையுடன் போராடும் உன்னத ஜீவன்களைக் கடவுள் பார்க்கவே இல்லையா? அவர்களைப் பார்க்கும் போது மட்டும் கண் மங்கலாகத் தெரிகிறதா? அப்படி இருந்தால் கடவுளுக்கு அடுத்த மாத சம்பளத்தில் ஒரு கண்ணாடி வாங்கிக் கொடுக்க வேண்டும்.....

இப்படி பலவாறு யோசித்த வண்ணமாக ஸ்டேஷனில் அமர்ந்திருந்தேன்... சத்தம் போட்டு அழும் குழந்தையைப் போல, இரைச்சல் அதிகமாகவும், பார்ப்பதற்கு அழகாகவும், கொஞ்சம் பொறுமையாகவும், தொடரி வந்துகொண்டிருந்தது...

உள்ளே நுழைந்ததும் என் இருக்கையில் கால் நீட்டி இருப்பவரை காலை இறக்குமாறு சொன்னேன்...

ஏற, இறங்க, பார்த்தவன்... சட்டென்று... சார்....என்னைத் தெரிகிறதா?

நான் பத்து வருடங்களுக்கு முன்னால் உங்களிடம் படித்த மாணவன் சார்... என் பேரு மித்ரன்...

எனக்கு ஞாபகத்துக்கு வரவில்லை... ஆனால், தெரிந்ததைப் போல காட்டிக்கொண்டேன்... நல்லா இருக்கியாப்பா...

ம்ம்... நல்லாருக்கேன் சார்... நீங்க எப்படி சார் இருக்கீங்க... பத்து வருடம் கழித்து பார்த்தாலும், அதே மாதிரியே இருக்கீங்க சார்.. அதான் சட்டென்று அடையாளம் தெரிந்து கொண்டேன்...

நீங்களும் கோயம்புத்தூரா சார் போறீங்க...

இல்ல... கொடுமுடி போகனும்...

இருவரின் இருக்கையும் எதிரெதிரே இருந்தது... பேச ஆரம்பித்தோம்... வீட்டுக் கதையில் ஆரம்பித்து, ஓட்டு போடும் மக்கள் வரை பலவாறாகப் பேசினோம்...

பேசிக்கொண்டே இருக்கும் போது அவ்வப்போது டீ, தண்ணீர், தின்பண்டம், என்னிடமிருந்த ஒரு ஆரஞ்சுப் பழம் ஆகியவை உள்ளே சென்றுகொண்டு இருந்தன..

திருச்சில இருந்து 3 மணி நேரம் ஆகும் கொடுமுடி செல்வதற்கு... ஆனால் நேரம் போனதே தெரியவில்லை... அவனிடம் விடைபெற்று கொடுமுடி ஸ்டேஷனில் இறங்கினேன்...

ஸ்டேஷன் எதிரில் ஒரு டீ கடை இருக்கும்... அதில் இருக்கும் இனிப்புப் போண்டாவை, சுவைத்தால்தான், என் நாக்கு நாச்சியார்புரம் பேருந்து நிலையத்திற்கு என்னை அழைத்துச் செல்லும்...

இன்றைக்கும் அதுபோல் சாப்பிட்டுவிட்டு, 50ரூபாய் நோட்டைக் கொடுத்தேன்... 32 ரூபாய் போக மீதி 15 ரூபாயும் மூன்று ஹால்ஸ் மிட்டாயும் கொடுத்தார்...

நான் ஹால்ஸ் மிட்டாய் கேட்கவே இல்லை என்றேன்... சில்லறை இல்ல சார்.... அவர் கூறியது உண்மையா, இல்லை வியாபார யுக்தியா,? ஏனெனில் இது போன்று நிறைய தடவை நடந்துள்ளது...

அப்போதெல்லாம் என் பையில் சில்லறைகள் சிரிக்கும் சப்தம் கேட்டுக்கொண்டே இருக்கும்...

எனவே சில்லறையைக் கொடுத்துவிட்டு, லேசாக சிரித்துவிட்டு நகர்வேன்...

ஆனால் இன்று என்னிடமும் சில்லறையில்லாததால் மேற்கொண்டு வேறு எதுவும்

பேசாமல் நாச்சியார்புரத்தை நோக்கி விரைந்தேன்....

பேருந்து கும்பலாக இருந்தது...

கல்லூரி மாணவர்களில் சில பேர் படியில் தொங்கியபடியும், சில பேர் பேருந்து கிளம்பியதும் ஓடி போய் தொத்திக்கொள்ளலாம் என்றும் காத்திருந்தனர்...

இவ்வளவு கூட்டத்திலும் ஒன்றிரண்டு வயதான ஆட்களும் அவ்வப்போது கூட்டத்தை அமுக்கிக்கொண்டு உள் நுழைந்தனர்...

எதற்கு இவ்வளவு கூட்டத்தில் அடித்து பிடித்துக் கொண்டு செல்ல வேண்டும், அடுத்த பேருந்து வருவதற்கு 30 நிமிடங்கள் இருந்தன... காத்திருந்தேன்...காத்திருப்பது ஒன்றும் எனக்கு புதிதல்ல...

காத்திருந்து ஓட்டு போட வேண்டும் என்பதற்காக சில பேர் ஓட்டே போடாமல் இருக்கிறார்கள்...

ஆனால் நான் அப்படி அல்ல...காத்திருந்து கிடைக்கும் பொருளுக்குக் கட்டாயம் மதிப்பு அதிகம் இருக்கும் என்பது என் எண்ணம்... எனவே காத்திருக்கத் தொடங்கினேன்...

பேருந்து சிறிது நேரத்திலேயே வந்தது...

ஒரு நாச்சியார்புரம் குடுங்க...

என்னிடம் 5 ரூபாய் காய்னும், 2 ரூபாய் காய்னும் இருந்தன... டிக்கெட் 6 ரூபாய்... சார், டிக்கெட் மிஷின் ரிப்பேர்... அதனால் டிக்கெட் கிடைக்காது... ம்ம்ம்......

இரண்டையும் கொடுத்து மீதமுள்ள ஒரு ரூபாய்க்காகக் காத்திருந்தேன்... ஆனால் கடைசிவரை அவர் என் ஒருரூபாயைத் தரவில்லை.

சரி, நாமே கேக்கலாம் என்று யோசித்போது, என் பிரஸ்டீஜ் போய்விடுமோ

என சிந்தித்த வண்ணம் அமைதியாக அமர்ந்திருந்தேன்... கடைசியில் அது நாம் உழைத்த பணம், கேட்டே ஆகவேண்டும் என்று கண்டெக்டரைக் கூப்பிடும் நேரம் பார்த்து, அவர் சொன்னார்...

சார், நாச்சியார்புரம் பஸ் ஸ்டாண்டுலாம் இறங்கிக்கிங்க... வேறு வழியின்றி கீழே இறங்கினேன்... காலம் தாழ்த்தித் செயல்படுவதால், அதற்குள் எல்லாம் முடிந்துவிடுகிறது... இனி உண்மையோ, பொய்யோ எதையும் காலம் தாழ்த்த கூடாது என முடிவெடுத்தேன்...

காலம் தாழ்த்தப்பட்ட உண்மை..., பொய்யென்று பெரும்பாலோனோர் எண்ணமாக உள்ளது....

கடைசியில் வீட்டை அடைந்ததும் , நான் இதுவரை நினைத்ததெல்லாம் மறந்து, நிம்மதியுடன், உள்ளே சென்றேன்... என்னைக் கண்டதும் அனைவர் முகத்திலும் சிறு புன்னகை பட்டு மறைந்தது...

வந்த களைப்பில் பெட்டில் படுத்தேன்...

இரண்டு நாள் கழித்து மீணடும், ஊருக்குச் செல்லும் ரயிலில் முன்பதிவு செய்துவிட்டு, பயணத்தைத் திட்டமிட்டுவிட்டுத் தூங்கினேன்....

இரண்டு நாள் சட்டென்று உருண்டோடியது...

மீண்டும் நாச்சியார்புறத்தில் இருந்து கொடுமுடி ஸ்டேஷனுக்கு டிக்கெட் எடுத்தேன்...

இந்த முறை சரியான சில்லறைகள் வைத்திருந்தேன்...

சார், ஒரு கோட்டை ஸ்டேஷன்...

6 ரூபாய், சரியாக எண்ணி குடுத்தேன்...

சார், இன்னும் ஒரு ரூபாய் குடுங்க...

டிக்கெட் 7 ரூபாய் ....

**ஷா.முஹம்மது அர்ஷத்,**

**முதுகலை இரண்டாமாண்டு.**



---

## உங்களுக்குத் தெரியுமா?

1, நெல்லை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் பாயும் தாமிரபரணி ஆறு, தமிழ் இலக்கியங்களில் பொருநை ஆறு என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளை ஆகிய பகுதிகள் அடங்கிய பொருநை ஆற்றங்கரை நாகரீகம் 3,200 ஆண்டுகள் பழைமையானது என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

2.“தமிழர் பண்பாட்டின் வேர்களைத் தேடி இந்திய நாடெங்கும் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்படும்:

கேரளா - பட்டணம், ஆந்திரா - வேங்கி, கருநாடகா - தலைக்காடு, ஒடிசா - பாலூர் ஆகிய இடங்களில் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்படும்.” - தமிழ்நாடு அரசு

3.உலகிலேயே முதன் முறையாக 2 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடும் பணியைத் தொடங்கியது - கியூபா அரசாங்கம்.

4.ஜாதியை ஒழிப்பதற்காக முன்னுதாரணமாக இருக்கும் கிராமத்திற்கு ரூ.10 இலட்சம் சிறப்பு தொகை பரிசாக வழங்கப்படும். - தமிழ்நாடு அரசு.

5. தமிழ், ஆங்கிலம், மலையாளம், கன்னடம், இந்தி என மொத்தம் 107 மொழிகள் பேசப்படும் ஒரே இந்திய நகரம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது - பெங்களூரு.

6 மாநகராட்சிகளின் பெயர்களும், அவை தொடங்கப்பட்ட ஆண்டும்.

1) மெட்ராஸ் (சென்னை) - 1688, 2) மதுரை - 1971, 3) கோவை - 1981, 4) திருச்சி - 1994, 5) சேலம் - 1995, 6) திருநெல்வேலி - 1995 7) வேலூர் - 2008, 8) ஈரோடு - 2008, 9) திருப்பூர் - 2008, 10) தூத்துக்குடி - 2008.

# சித்திரம் பேசுதடி...







செ.ராகவி
இளங்கலை முதலாமாண்டு.



மு.கிருத்திகா
இளங்கலை முதலாமாண்டு.

அ.ஹாஜிரா பானு
இளங்கலை முதலாமாண்டு.




எம் துறையின் மாபெரும் பயணத்தின் மற்றுமோர் மைல்கல்லாக அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான கலை – இலக்கியத் திருவிழாவாக வாகை சூடியது

தமிழி – 2024